மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுப் பணிகள் முடிவுற்றதற்குப் பின்னால் இதுபற்றி பரிசீலிக்கப்படும், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவனஈர்ப்பு. திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை.

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. ம. சின்னசாமி பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் பின்வரும் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

''இந்தியத் தணிக்கைத்துறைத் தலைவரின் 1976-77 மற்றும் 1977-78 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வேளாண்மைத் துறை தொடர்பான பத்திகள் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த முப்பத்தைந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய குழுவின் நூற்று ஒன்பதாவது அறிக்கை'' நன்றி, வணக்கம்.

6 அறிவிப்பு.

கேளிக்கை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993 (ஆ. செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்.

7. அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்)

கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)
மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 1993-94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 24—தொழில்கள்.

(ஆ) கோரிக்கை எண் 53—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993-94 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி. திரு. ச. இராமச்சந்திரன்.

முற்பகல் 11-35

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் பேசுவதற்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று அவர் பேசுவதற்காக முழு நேரமும் உட்கார்ந்திருந்து, இரண்டு மணி வரையிலே இங்கே அமர்ந்திருந்து பேச முடியாமல் இருந்தது. அவருக்கு இன்று அனுமதி அளித்து, காங்கிரஸ் கட்சியின் சார்பில் வைண்ட் அப் செய்கிற உறுப்பினருக்கு